மல்கியா

rawpixel

- மல்கியாவின் புத்தகம் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம்.
- இந்த புத்தகம் சிறு தீர்க்கதரிசன புத்தகங்களில் ஒன்றாகும்.
- மல்கியா புத்தகம் மோசேயின் காலங்களிலிருந்து கர்த்தர் இஸ்ரேலரை அவர்களுடைய சகல அக்கிரமங்களின் மத்தியிலும் நடத்திவந்த விதத்தை எடுத்துக்காட்டுகிறது.
- மேசியாவின் காலத்திற்குப்பின் வரப்போகும் மாற்றங்கள் , இஸ்ரவேல் எவ்வாறு சிறப்பாக மாறும் போன்றவற்றை மல்கியா புத்தகம் சுட்டிக்காட்டுகிறது.
- மல்கியா புத்தகம் **"சொற்போர்"** (disputation) முறையைப் பயன்படுத்துகிறது.
    - தேவாலயம் மற்றும் இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கர்த்தர் வைக்கும் ஒரு **கூற்று**.
    - அக்கூற்றிற்கு தங்கள் ஆட்சேபனையைக் **கேள்வி**யாக எழுப்பும் ஜனங்கள்.
    - பின்னர் ஆட்சேபனையை மறுக்கிற வண்ணமாக கர்த்தர் சார்பாக தீர்க்கதரிசியால் முன்வைக்கப்படும் **விளக்கம்**.

Sword of the Spirit

புத்தகத்தின் சூழல்

rawpixel

புத்தகம் எழுதப்பட்ட சூழ்நிலை

- பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கர்த்தரின் பெரிதான இரக்கத்தினால் ஜனங்கள் பெரும் விடுதலையையடைந்து 3 கட்டமாக தங்கள் தேசத்திற்கு கொஞ்ச ஜனமாய்த் திரும்பினார்கள்.
- செருபாபேல், எஸ்றா , நெகேமியா காலத்தில் ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகளின் மூலம் திடப்படுத்தப்பட்டவர்களாய் ஆலயத்தை மீண்டும் கட்டினார்கள், நகரத்தின் சுவர்கள் மீண்டும் பலப்படுத்தப்பட்டன, மற்றும் பலிமுறைமைகள் மீண்டும் செயல்படுத்தப்பட்டது.
- பின்னர் அண்டை தேசங்களுடனான உறவு தொடங்கியது.
- கர்த்தரைத் தொழுது கொள்ளுவதற்கான அவர்களின் உற்சாகம் வெறும் செயலாக மாறியது.
- பிற தெய்வங்களை தொழுது கொள்ளும் முறைகள் தேவாலய வழிபாட்டிற்குள் வந்தது.
- ஜனங்களுடைய இருதயங்கள் கர்த்தரை விட்டு தூரமானது.கர்த்தருக்கு பயப்படுகிற பயம் அற்றுப்போனது.

Sword of the Spirit

- தீர்க்கதரிசி பாபிலோனின் சிறையிறுப்பிலிருந்து வந்த பின் ஜனங்கள் செய்து வந்த பாவங்களைச் சுட்டிக்காட்டி , கர்த்தரை உண்மையாய்த் தேடும்படி அழைக்கிறதை இந்த புத்தகத்தில் காணலாம்.
- மல்கியா என்பதின் பொருள் "தேவனின் தூதன்"
- மல்கியா தீர்க்கதரிசியின் காலம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அது கி. மு 515--433 இருக்க வாய்ப்பு உண்டு.
- மல்.1:8 ல் அதிபதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கொண்டு, அது சிறையிறுப்பிலிருந்து வந்த பின் ஆட்சியிலிருந்த பெர்சிய அதிபதியை சுட்டிக்காட்டுகிறது.
- கி.மு.515 ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது, அதன் பின் வருகிற வழிபாட்டின் சீரழிவு சிறிது காலம் கடந்துவிட்டதைக் குறிக்கிறது.
- மல்கியாவுக்கும், எஸ்றா-நெகேமியாவுக்கும் இடையிலான ஒற்றுமைகள் தீர்க்கதரிசியின் காலம் ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்திருக்கக்கூடும் என்று காட்டுகிறது.

Sword of the Spirit
Sword of the Spirit

புத்தகத்தின் நோக்கம்

rawpixel
Sword of the Spirit

- கர்த்தர் தம் ஜனங்களின் மேல் வைத்துள்ள அன்பினிமித்தம் அவர்களுக்காக அனைத்தையும் செய்வார் என்பதை நினைவூட்டுகிறது
- கர்த்தர் வரப்போகிற நாள் ஒன்று உண்டு.அதற்கென்று ஆயத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.
- தேவன் நியாயாதிபதியாக வரும்போது ஜனங்கள் செய்கின்ற தீமைக்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பதை காட்டுகிறது.
- கர்த்தர் நியாயாதிபதியாக வரும்போது அவர்களின் கிரியைகளுக்குத் தக்க பலனை அளிக்கிறார் என்பதை நினைவுபடுத்துகிறது.
- தேவன் தான் பண்ணின உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பரிபூரணமாய்ப் பெற்றுக் கொள்ள மனந்திரும்புதல் அவசியம் என்பதை எடுத்துக்கூறுகிறது.

Sword of the Spirit

புத்தகத்தின் தொகுப்பு

rawpixel

Sword of the Spirit

- **இஸ்ரேலின் பாவங்களுக்கான கண்டனம் (1: 1-2: 16)**
    - தேவனின் அன்பு (1: 1–5)
    - ஆசாரியர்கள் (1: 6–2: 9)
        - பலிபீடத்திற்கான காரியங்களில் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல் (1: 6-14)
        - தேவனுக்கு மகிமை செலுத்தவில்லை (2: 1–3)
        - உடன்படிக்கையைக் கெடுத்தார்கள் (2: 4–9)
    - ஜனங்களைக் கண்டித்தல் (2: 10-16)

- **இஸ்ரேலின்மேல் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மற்றும் ஆசீர்வாதங்கள் (2: 17-4: 6)**
    - ஒரு தூதன் (2: 17–3: 5)
    - மனந்திரும்ப சவால் (3: 6-12)
    - இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு எதிராக விமர்சித்தல் (3: 13-15)
    - விசுவாசமுள்ள மீதியானவர்களுக்கு ஆறுதல் (3: 16-4: 6)

Sword of the Spirit

இஸ்ரவேலின் துணிகரமான பாவங்கள்

- தேவ அன்பை மறுத்தல் (1:2 - 5)
- தேவனுக்குறிய கனத்தைக் கொடுக்க மறுத்தல் (விக்கிரக வழிபாடு)(1:6 - 2:9)
- கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்குதல் (அந்நிய ஜனங்களுடன் கலப்பு) (2:10 - 16)
- தேவ நீதியை மறுவரையறுத்தல் (2:17 - 3:6)
- கர்த்தருடைய ஐசுவரியத்திலிருந்து வஞ்சித்து எடுத்துக்கொள்ளுதல் (3:7 -12)
- கர்த்தருடைய கிருபையை இழிவுபடுத்துதல் (3:13 - 15)

Sword of the Spirit
Sword of the Spirit

சொற்போர்

“Disputation”

rawpixel

அதி. 1:2 - 5

- கர்த்தர் (கூற்று) : **நான் உங்களை சிநேகித்தேன்.**
- ஜனங்கள் (கேள்வி) : **எங்களை எப்படிச் சிநேகித்தீர்??**
- கர்த்தர் (விளக்கம்) :
  - ஏசா யாக்கோபுக்குச் சகோதரனல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன்.(2)
  - ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்.(3)
  - இதை உங்கள் கண்கள் காணும்.கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள்.(5)

❖ கற்றுக்கொள்ள வேண்டியது:

- பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.(யோவா.6:37)
- எப்படிபட்ட சூழ்நிலைகளில் நாம் இருந்தாலும் ,தேவன் நம்மை வழி நடத்துவார்.தேவன் தாம் தெரிந்துகொண்ட ஜனத்தின் மேல் வைத்துள்ள அன்பு மாறாதது.

Sword of the Spirit

அதி.1:6 - அதி. 2:9

- கர்த்தர் (கூற்று) : என் நாமத்தை அசட்டைப் பண்ணுகிற ஆசாரியர்களே, நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே?
- ஜனங்கள் (கேள்வி) :உமது நாமத்தை எதினாலே அசட்டைப் பண்ணினோம்?? உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம்??
- கர்த்தர் (விளக்கம்) :
  - அசுத்தமான அப்பம் படைத்தல் , ஊனமானதைப் பலியிடுதல்.(1 : 7,8)
  - கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்றும், அதின் பலன் அற்பமானது என்று சொல்லி என் நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குதல்.(1 : 12)
  - கெட்டுப் போனதை நேர்ந்துகொள்ளுதல்.அதை உங்கள் கைகளில் அங்கீகரித்துக் கொள்வேனோ??(1 : 9)
  - ஜீவனும் சமாதானமுமாக இருந்த உடன்படிக்கையைக் கெடுத்துப்போட்டீர்கள்.(2 : 5,8)

Sword of the Spirit

....

- உங்கள் பேரில் எனக்குப் பிரியமில்லை.(1 : 10)
- நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்தைக்குறித்துப் பட்சபாதம்பண்ணினபடியினால் நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசருமாக்கினேன்.(2 :9)

★ **என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்.(1 : 11)**
★ **என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்.(1 :14)**
★ **நான் மகத்துவமான ராஜா.(1 :14)**

❖ கற்றுக்கொள்ள வேண்டியது:

➢ கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்.(சங் 22:23)

Sword of the Spirit

அதி. 2:10 - 16

- கர்த்தர் (கூற்று) : **உங்கள் காணிக்கைகளை பிரியமாய் ஏற்றுக் கொள்வதில்லை**
- ஜனங்கள் (கேள்வி) :**ஏன்??**
- கர்த்தர் (விளக்கம்) :
  - கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக்குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம்பண்ணினார்கள்.(11)
  - கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்...(13)
  - தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்....(16)

❖ கற்றுக்கொள்ள வேண்டியது :

- கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?...., நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. (2 கொரி.6:15,16)

Sword of the Spirit

அதி. 2 :17 - 3:6

- **கர்த்தர் (கூற்று) : உங்கள் வார்த்தைகளினாலே வருத்தப்படுத்துகிறீர்கள்.**
- **ஜனங்கள் (கேள்வி) :எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம்??**
- **கர்த்தர் (விளக்கம்) :**
  - பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும் ......நியாயந்தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே.(2 : 17)
  - உடன்படிக்கையின் தூதனானவர் (இயேசு கிறிஸ்து) உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, … புடமிடுவார்.(3 : 3)

கற்றுக்கொள்ள வேண்டியது:

- அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.(எபே 4:30)
- இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, ……. ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.(யோவா 3:18)

Sword of the Spirit

அதி. 3:6 - 12

➢ கர்த்தர் (கூற்று) : **1. என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன்(7). 2. என்னை வஞ்சிக்கிறீர்கள்(8).**

➢ ஜனங்கள் (கேள்வி) : **1. நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும்??(7) 2. எதிலே உம்மை வஞ்சித்தோம்??(8)**

➢ கர்த்தர் (விளக்கம்) : 1. என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளை விட்டு விலகிப்போனீர்கள்.(7) 2. தசமபாகத்திலும், காணிக்கையிலும்(8)

❖ கற்றுக்கொள்ள வேண்டியது:

- ➢ நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே.(மத்.23:23)

★ **நான் கர்த்தர், நான் மாறாதவர்..(6)**

Sword of the Spirit

அதி.3 : 13 - 4 : 3

- கர்த்தர் (கூற்று) : **நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது**
- ஜனங்கள் (கேள்வி) : **உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் ??**
- கர்த்தர் (விளக்கம்) :
  - தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரீட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்... நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்.(15,18)
  - இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்.(4:1)

❖ கற்றுக்கொள்ள வேண்டியது:

- கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்.கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.(சங்:145:17,20)

Sword of the Spirit

Reference :

1. பரிசுத்த வேதாகமம் (தமிழ்)
2. Newchristianbiblestudy.org, The Book of Malachi
3. gty.org/library
4. bible.org/article/introduction
5. slideserve.com,The end of the beginning.
6. biblestudys.org,Malachi.
7. lifehopeandtruth.com,minorprophets,Malachi.
8. God’s Great Electing Love, Dan Hoffman
9. The Book of Malachi by Rev. George McCurdy

Sword of the Spirit

Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

rawpixel

Sword of the Spirit